கலேவல பிரதேச சபை
மாத்தளை மாவட்டம்

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 மே 26 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 மே 31 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கலேவல பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | நடைமுறை பொறுப்புக்கள் ரூபா 742,366 ஆல் குறைத்துக் காண்பிக்கப் பட்டிருந்தது. | கணக்குகள் சரி செய்யப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்கள் மூலம் சரி செய்யப்படும். |
| (ii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய மூலதன தொகை ரூபா 742,366 தொகையால் கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கணக்குகள் சரி செய்யப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்கள் மூலம் சரி செய்யப்படும். |
| (iii) | உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெற்ற கடனுக்காக செலுத்த வேண்டிய ரூபா 5,089,176 தொகையான கடன் வட்டி பொறுப்பாக கணக்கீடு செய்யப்படவில்லை. | கடன் வட்டித் தொகை சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்கள் மூலம் சரி செய்யப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | பொது நிதியம் 2019 இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட 17 நிர்மாணக் கடன் கொடுத்தோரின் பெறுமதி இரு முறை கணக்கீடு செய்யப்பட்டமையால் ரூபா 4,785,566 பெறுமதியால் கடன்கொடுத்தோர் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்குகள் சரி செய்யப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்கள் மூலம் சரி செய்யப்படும். |
| (v) | இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்திகள், கணனி மற்றும் உபபாகங்களுக்கு செலவிடப்பட்ட ரூபா 502,743 கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | கணக்குகள் சரி செய்யப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்கள் மூலம் சரி செய்யப்படும். |
| (vi) | கட்டிட அபிவிருத்தி செயற்பாடு களுக்காக செலவிடப்பட்ட ரூபா 1,577,736 பெறுமதி மூலதனமாக்கப்படவில்லை. | கணக்குகள் சரி செய்யப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்கள் மூலம் சரி செய்யப்படும். |

(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப் படுகின்ற 07 கணக்குகளின் மீதிகளுக்கும் அவற்றுக்குரிய உபயோகப் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 114,666,304 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | மீதிகளின் வேறுபாட்டை இணக்கஞ் செய்து கணக்குகள் சரி செய்யப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்கள் மூலம் சரி செய்யப்படும். |

(இ) கணக்காய்வுக்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் காணப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 389,191,073 பெறுமதியான 02 கணக்குகளுக்கு உரிய ஏற்றுக் கொள்ளக் கூடிய சான்றுகளை சமர்ப்பிக்காத காரணத்தால் | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட | காணி கட்டிடங்களின் சட்டரீதியான உரித்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமான முறையில் சான்றுறுதி செய்ய முடியவில்லை. | வேண்டும். | எடுக்கப்படுவதுடன் நூலகப் புத்தகங்களுக்காக உரிய அட்டவணைகள் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் . |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 15,025,348 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 13,446,141 ஆக இருந்தது.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 2,403,000 | 2,430,966 | 3,114,586 | 1,624,678 | 2,053,000 | 3,454,314 | 2,897,105 | 2,293,101 |
| (ii) | வாடகை | 5,700,000 | 4,321,580 | 4,524,528 | 550,859 | 4,950,000 | 3,227,022 | 3,338,304 | 150,527 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 4,100,000 | 3,834,280 | 3,829,280 | 691,370 | 3,550,000 | 3,498,715 | 2,807,345 | 691,370 |
| (iv) | ஏனைய வருமானம் | 22,200,000 | 23,716,987 | 8,598,700 | 15,118,287 | 21,700,000 | 39,552,551 | 17,677,445 | 21,875,109 |
| | மொத்தம் | 34,403,000 | 34,303,813 | 20,067,094 | 17,985,194 | 32,253,000 | 49,732,602 | 26,720,199 | 25,010,107 |

2.2.2 ஆதன வரி

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட வீதவரி மற்றும் அதற்கு முன்னர் காணப்பட்ட நிலுவையில் 38 சதவீதம் நிலுவையாக காணப்பட்டது. | நிலுவை வருமானம துரிதமாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். |
| (ஆ) | ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை வீதவரி மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | வீதவரி மதிப்பீட்டினை துரிதப்படுத்த வேண்டும். | ஆதன மதிப்பீட்டிற்கு ஆளுனரின் அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் எதிர்வரும் நடவடிக்கைகளுக்காக விலைமதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு தொடர்புபடுத்தப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். |
| (இ) | நிலுவை வீத வரியை அறவீடு இடம் பெற்றிருக்கவில்லை. | நிலுவை வீதவரி அறவிடப்பட வேண்டும். | நிலுவை வீதவரியை அறவிடுவதற்கு சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். |

2.2.3 கடை வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கடைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 988,025 ஆன கேள்விக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை கேள்விக் கட்டணம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | கேள்வி தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை அறியத் தருகின்றன். |

2.2.4 ஏக்கர் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 35,333 ஏக்கர் வரியாக அறவிடப்பட வேண்டும். | நிலுவை ஏக்கர் வரி விரைவாக அறவிடப்பட வேண்டும். | ரூபா 36,201 தொகை ஏக்கர் வரி நிலுவையாக இருப்பதாக அறியத் தருகின்றன். |

2.2.5 பதாதைகளிலிருந்து கட்டணங்கள் அறவிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| புதிததாக பொருத்தப்பட்டுள்ள விளம்பர பதாதைகள் தொடர்பாக கணிப்பீடொன்று மேற்கொண்டு கட்டணங்களை அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு கட்டணம் அறவிடப்பட வேண்டும். | 48 பதாதைகளிலிருந்து ரூபா 706,327 தொகை அறவிடப்பட்டுள்ளதுடன் செலுத்தாத பதாதைகள் வெட்டி அகற்றியதாக அறிய தருகின்றேன். |

2.2.6 சுற்றாடல் அனுமதிப்பத்திரக் கட்டணம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 41 புகையிலை அடுப்புகளுக்குரிய சுற்றாடல் அனுமதிப்பத்திரங்கள் வழங்கி கட்டணங்கள் அறவிடப் பட்டிருக்கவில்லை. | சுற்றடால் அனுமதிப்பத்திரம் வழங்குவது சபையின் பொறுப்பாகும். | அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்காக தொடர் நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிய தருகின்றேன். |
| (ஆ) | காலவதியான 05 சுற்றாடல் அனுமதிப்பத்திரங்களை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றடால் அனுமதிப்பத்திரங்களை புதுப்பித்தல் வேண்டும். | 02 கைத்தொழில்கள் நிறுத்தப்பட்டுள்ளதுடன் 03 கைத்தொழில்கள் அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் உப விதிகள் விதிக்கப்பட்டிருந்த 11 விடயங்களுக்காக போதிலும், உப விதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | அனத்து உபவிதி விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டும். | பொதுவில் ஏற்றுக் கொள்ளப்பப்பட்ட உப விதிக்கோவையில் குறிப்பிடப்பட்ட 18 உறுப்புரைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளதுடன் திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பாக பொது உப விதி பின்பற்றப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். |

(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிறப்பிக்கப்பட்டுள்ள உப விதிகளின் பிரகாரம் சபையினால் நிறைவேற்ற வேண்டிய 12 இலக்குகள் தொடர்பாக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | அனைத்து இலக்குகளும் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்க வேண்டும் | 2020 ஆம் ஆண்டு முதல் சீராக்கப்படும் என அறியத் தருகின்றேன். |

(இ) இலக்குகளை நிறைவேற்றுவதல் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பொது நிதியம் - 2019 இன கீழ் நிறைவேற்றப்பட வேண்டிய 03 நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | திட்டமிடப்பட்டதன் பிரகாரம் நிர்மாணங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். | ஒரு நிர்மாணம் 2020 மார்ச்ச அளவில் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த துடன் எஞ்சிய இரண்டு வேலைகள் நிறைவேற்றப்பட்டு வந்ததுடன் கொடுப்பனவு செய்யும் போது தாமதக் கட்டணங்கள் அறவிடப்படுவதாக அறிய தருகின்றேன் |

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| விபத்திற்குட்பட்டிருந்த கெப் வண்டி மற்றும் மோட்டார் கிரேடர் தொடர்பாக நி.பி 104(1)(அ) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் மோட்டார் கிரேடர் இயந்திரத்திற்கு உரிய காப்புறுதி இழப்பீடு கிடைத்திருக்க வில்லை. | பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிரு ந்து இழப்பீட்டைப் அறவிட வேண்டும். | நி.பி 104(1) பிரகாரம் பரிசோதனை மேற்கொண்டு உரிய நட்டத்தை பொறுப்பு வாய்ந்த தரபபினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத்தருகின்றேன். |

3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகை ஊழியர்கள் | | |
| மீளாய்வாண்டின் திசெம்பர் **31** வரை **08** பதவிகளில் 17 வெற்றிடங்கள் காணப்பட்டன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். |
| (ஆ) ஊழியர் கடன் | | |
| இட மாற்றம் பெற்றுச் சென்ற/ ஓய்வுபெற்றஉத்தியோகத்தர்கள் நானகு பேரிடமிருந்து கிடைக்க வேண்டியிருந்த ரூபா 430,781 ஆன கடன் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | கடன் பணத்தை அறவிடுவது சபையின் பொறுப்பாகும். | கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 05 ஏக்கர், 35 பேர்ச் அளவிலான வஹகோட்டை, சியம்பலாகஹவெல பிரஸ்டிஸ்லேன்ட் காணியை அபிவிருத்தி செய்து விற்பனை செய்வதற்கு அங்கீகாரம் கிடைக்காமல் இருந்தும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக அதற்குரிய நிறுவனங்களிடமிருந்து பரிந்துரைகள் பெற்றுக்கொள்ளப்படாமல் 15 காணித் துண்டுகள் விற்பனை செய்யப்பட்டிருந்தன. | குறித்த நிறுவனங்களிடமிருந்து பரிந்துரைகள் பெற்றுக் கொள்ளப்படாமல் விற்பனை செய்யப்பட்ட காணி தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கை வேண்டும். | குறைபாடுகளை பூர்த்தி செய்த சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்த போதும் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படாமல் காணி பகுதிகளாக்கி விற்பனை செய்வதை நிறுத்துமாறும் அவ்வாறில்லாவிட்டால் சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதாக அறிவித்து கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். |

3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

3.5.1 சொத்துக்கள் பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான சனசமூக மண்டபங்கள் மற்றும் மயானங்கள் என்பவற்றை பதிவேடுகளுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பிரதேச சபையின் சொத்துக்களைப் பாதுகாத்துக் கொள்ளப்பட வேண்டும். | அளவீட்டு செயற்பாடுகளை மேற்கொண்டு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் கையேற்கப்பட்டதன் பின்னர் சொத்துக்கள் பதிவேட்டில் உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என அறிய தருகின்றேன் |

3.5.2 பராமரித்தல் மற்றும் பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி வரையில் 09 வாகனங்களுக்காக எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் சபையின் பொறுப்பாகும் | இந்த வாகனங்கள் திருத்தம் செய்யப்பட்ட பின்னர் எரிபொருள் பரிசோதனை மேற் கொள்ள தீர்மானித்துள்ள அறிய தருகின்றேன். |

3.5.3 கையேற்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையால் பயன்படுத்தப்படும் 03 வாகனங்கள் சபைக்கு பொறுப்பேற்கப் பட்டிருக்கவில்லை. | சபை பயன்படுத்தும் வாகனங்களை கையேற்கப்பட வேண்டும். | வாகனங்களை கையேற்க நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். |

3.6 நட்டங்களும் சேதங்களும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பெக்கோ லோடர் இயந்திரம் 2018 ஆம் ஆண்டின் போது விபத்திற்கு உட்பட்டு ரூபா 50,000 இற்கு மேற்பட்ட நட்டமொன்றை இடம்பெற்றிருந்த போதும், மீளாய்வாண்டின் இறுதி வரை நிதிப்பிரமாணம் 104(1) இன் பிரகாரம் பரிசோதனை மேற்கொண்டு பொறுப்பான தரப்பினர் நிச்சயிக்கப்பட்டிருக்க வில்லை. | சபையினால் நட்டம் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நட்டத்தை அறவிடல் வேண்டும். | முறையான பரிசோதனையொன்று மேற்கொண்டு பொறுப்பான தரப்பினர்களிடமிருந்து நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். |